செய்தி வெளியீடு எண் : 1311 நாள் : 05.07.2023

# செய்தி வெளியீடு

## நீர்வளத் துறை

### காவிரி நதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய தண்ணீரை உடனடியாக வழங்க வேண்டி புதுடில்லியில் இன்று 05.07.2023 ஒன்றிய அரசின் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களை தமிழ்நாடு அரசின் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் சந்தித்தார்.

புதுடில்லியில் இன்று 05.07.2023 ஒன்றிய அரசின் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களை தமிழ்நாடு அரசின் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் சந்தித்து காவிரி நதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய தண்ணீரை உடனடியாக வழங்க வேண்டும் என்றும் மேகதாது அணையினை கட்டக்கூடாது என்றும் வலியுறுத்தி கோரிக்கை மனுவினை வழங்கினார்.

மேலும், ஜுன் மற்றும் ஜுலை 3–ஆம் தேதி வரை 12.213 டி.எம்.சி அடி தண்ணீர் தமிழ்நாட்டிற்கு கிடைத்திருக்க வேண்டும். ஆனால், இதுவரை 2.993 டி.எம்.சி அடி தண்ணீர் தான் வரப்பெற்றுள்ளது. 9.220 டி.எம்.சி அடி தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், காவிரி டெல்டா பகுதியில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் எல்லாம் உலர்ந்துபோய்விடும். ஆகையினால், உச்சநீதிமன்றத்தின் ஆணையின்படி, கர்நாடக அரசு, தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய உரிய பங்கீட்டு நீரினை உடனடியாக வழங்குவதை உறுதி செய்வது காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் பொறுப்பாகும். எனவே, ஒன்றிய

அரசின் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை தமிழ்நாட்டிற்கு அளிக்க வேண்டிய உரிய பங்கீட்டு நீரினை கர்நாடக அரசு உடனடியாக விடுவிக்க காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை வலியுறுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசின் இணைச் செயலாளரை அழைத்து இது தொடர்பாக காவிரி நீர் மேலாண்மை ஆணையத்துடன் கலந்தாலோசித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இச்சந்திப்பின்போது, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ். விஜயன் மற்றும் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in